02.04.2016

தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## கொடைக்கானலில் குவியும் தர்பூசணி

கொடைக்கானலில் நிலவி வரும் வெயிலை சமாளிப்பதற்கு, பொது மக்கள் தர்பூசணிப்பழம் மற்றும் குளிர்பானங்களை பருகி வருகின்றனர்.

கொடைக்கானலில் கடந்த 2 மாதங்களாக வெயில் நிலவி வருகிறது. இதனால், வனப்பகுதிகளில் சருகுகள், புற்கள் காய்ந்து எளிதாக தீப்பிடிக்கிறது. நீரோடைகளிலும் தண்ணீர் வரத்து இல்லாததால், வறட்சியாகக் காணப்படுகிறது.

இச்சூழலில் வெயிலை தாக்குப்பிடிக்க முடியாமல், பொதுமக்களில் பலர் குளிர்பானங்களை நாடவேண்டிய சூழல் உள்ளது. பொதுவாக, கொடைக்கானலில் உள்ளவர்கள் தேநீரை அதிக அளவில் பருகுவர். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் குளிருக்கு இதமாக தேநீரைப் பருகுவர். ஆனால், இங்கு முதன்முறையாக இந்தாண்டு தர்பூசணிப் பழம், கம்மங் கூழ், மோர் ஆகியன விற்பனை செய்யப்படுகிறது.

கொடைக்கானலில் குளிர்பானங்கள் அமோகமாக விற்கும் அளவுக்கு சீதோஷ்ண நிலை கடுமையாக உள்ளதால், பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் ஆதங்கப்படுகின்றனர். இருப்பினும், மாலையில் குளிர்ந்த சீதோஷ்ண நிலை உள்ளது.

## கேரள பழங்கள் விலை உயர்வு

கேரளத்தில் இருந்து வரும் அன்னாசி, ஏத்தம்பழம், செவ்வாழை பழங்கள் வரத்துக் குறைவால் விலை அதிகரித்துள்ளது. கேரளத்தின் பத்தனம்திட்டா, கோட்டயம், கொல்லம் பகுதிகளில் இருந்து அன்னாசிப் பழம் தமிழகத்துக்கு வருகிறது.

இந்த ஆண்டு, கேரளத்தில் கடந்த இரு மாதங்களாக கோடை வெயில் வாட்டி எடுக்கிறது. இதனால் அன்னாசி விளைச்சல் குறைந்து பருமனன் குறைந்த பழங்களே விற்பனைக்கு வருகிறது. சில வாரங்களுக்கு முன் பருமன் அதிகமான அன்னாசிப் பழங்கள் கிலோ ரூ.25க்கு விற்றன. தற்போது சீசன் முடியும் நிலையில் பருமன் குறைந்த பழங்களின் விலையே ரூ. 40ஆக அதிகரித்துள்ளது.

இதுபோல் கேரளாவில் இருந்து வரும் செவ்வாழை, ஏத்தம்பழம் போன்றவையும் கிலோ ரூ.8க்கு விற்றது ரூ. 10 ஆக அதிகரித்துள்ளது.

**தானிய ஈட்டுக்கடன் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

மாவட்ட கூட்டுறவு கிடங்குகளில் நெல் உள்ளிட்ட தானியங்களை ஈடு வைத்து, கடன்பெற்று பயன்பெறலாம் என்று கூட்டுறவுத் துறை தெரிவித்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவுத் துறையின் கீழ் 157 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 7 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் பண்டக சாலை உள் கட்டமைப்பு நிதி உள்ளிட்ட திட்டங்களின் கீழ் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 230 கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

இதுதவிர, 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 கிடங்குகள், 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3 கிடங்குகள், 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1 கிடங்கு கட்டப்பட்டுள்ளன.

இந்த கிடங்குகளில் வேளாண் விளை பொருள்களை பாதுகாப்பாக வைத்திருக்க அறிவியல் முறையிலான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த சங்கங்கள் மூலமாக தானியங்களை ஈடு வைத்து, சங்க அங்கத்தினர்களுக்கு 6 மாத தவணையில் 13.75 சதவீத வட்டி விகிதத்தில் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. சந்தை விலையில் 70

சதவீதம் அளவுக்கு அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ரூ.3 லட்சம் வரை ஈட்டுக்கடன் வழங்கப்படுகிறது.

இதுதவிர, அங்கத்தினர் அல்லாத விவசாயிகளை இணை உறுப்பினர்களாக சேர்த்து அவர்களது விளைபொருள்களை நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்வதற்கு ஏதுவாக தானியங்களை சேமித்து வைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சேமித்து வைக்கப்படும் ஒரு மூட்டை தானியத்துக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7 வீதம் (இன்சூரன்ஸ் உள்பட) கிடங்குகள் வாடகைக்கு விடப்படும் வசதி உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது அதிகப்படியான அளவு நெல் விளைந்துள்ளது. இந்த நேரத்தில் நெல்லுக்கான விலை குறைவாகவே உள்ளது. எனவே, விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல்லை இந்த கிடங்குகளில் ஈடு வைத்து அவசர தேவைக்காக தானிய ஈட்டுக்கடன் பெறலாம். கடன் பெற விரும்பாத விவசாயிகள் நெல்லை சேமித்து வைக்க கூட்டுறவு சங்கங்களின் தானிய கிடங்குகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது.

## ஏப். 5-ல் பயிர் காப்பீட்டு திட்ட விழிப்புணர்வு முகாம்

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஏப். 5-ம் தேதி பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற உள்ளது என்றார் மையத்தின் முதுநிலை விஞ்ஞானியும், தலைவருமான (பொ) ஜெ. கதிரவன்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டு திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் ஏப். 5-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த முகாமில் பயிர்க் காப்பீட்டு திட்டம் குறித்த விளக்கம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட உள்ளது. மேலும் வேளாண்மை,

தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்த கருத்துக் காட்சியும் இடம்பெற உள்ளது. முகாமில் பங்கேற்க ஆர்வமுள்ள விவசாயிகள் வேளாண் அறிவியல் மையத்துக்கு ஏப்.5-ம் தேதி காலை நேரில் வரலாம். விவரங்களுக்கு 04328-293251 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## பேட்டையில் இயற்கை உரம் தயாரிக்கும் பயிற்சி

திருநெல்வேலி அருகேயுள்ள பேட்டையில் இயற்கை உரம் தயாரிக்கும் பயிற்சி பட்டறை அண்மையில் நடைபெற்றது.

ம.தி.தா. இந்துக் கல்லூரியின் சமூக மேம்பாட்டு திட்டம் சார்பில், பேட்டை நரிக்குறவர் குடியிருப்பில் உள்ள ஸ்காட் பள்ளி வளாக மாணவர்களுக்கு மண்புழு மூலம் திடக்கழிவுகளை இயற்கை உரமாக மாற்றுதல் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது. விலங்கியல் துறை பேராசிரியர் அ.சு.கங்கா தொடங்கி வைத்தார். விலங்கியல் துறை மாணவ, மாணவியர் பலர் கலந்துகொண்டனர். பள்ளித் தலைமை ஆசிரியை சே. சேர்மகனி நன்றி கூறினார்.

## 23,081 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

காரைக்கால் மாவட்டத்தில் 23,081 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிபோடப்பட்டதாக, கால்நடைத் துறை அதிகாரி தெரிவித்தார்.

இந்திய அரசின் அறிவுறுத்தல்படி, தேசிய கோமாரி நோய் தடுப்புத் திட்டம் காரைக்கால் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின்படி, வீடு வீடாகச் சென்று கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் வகையில், கடந்த மார்ச் மாதம் 18-ஆம் தேதி சிறப்பு முகாம் தொடங்கப்பட்டது. மார்ச் 31-ஆம் தேதி வரை இம்முகாம் நடைபெற்றது.

இதுகுறித்து, கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை காரைக்கால் மண்டல இணை இயக்குநர் டாக்டர் க.லதாமங்கேஷ்கர் வெள்ளிக்கிழமை கூறியது:

காரைக்கால் நகரம், நெடுங்காடு, தென்னங்குடி, திருப்பட்டினம், நிரவி, கோட்டுச்சேரி ஆகிய 6 கால்நடை மருந்தகங்கள் மூலம், வீடு வீடாகச் சென்று கால்நடை மருத்துவக் குழுவினர், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

இதன்மூலம், மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக 23,081 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டன. இந்த பணியில் 6 கால்நடை மருத்துவரைக் கொண்ட மருத்துவக் குழுவினர் பணியாற்றினர். ஆண்டுக்கு 2 முறை என்ற கணக்கில் தடுப்பூசி போடப்படுகிறது. இது 10-ஆவது முறையாகும். கால்நடைத் துறையினருக்கு கால்நடை வளர்ப்போர் நல்ல ஒத்துழைப்பு தந்தனர். தற்போதைய செயல்பாட்டின் மூலம் காரைக்கால் மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கம் வெகுவாக குறைய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

## தீவனப் பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி

காரைக்கால் வேளாண் கல்லூரியில் தீவனப் பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு வெள்ளிக்கிழமை பயிற்சியளிக்கப்பட்டது.

காரைக்கால் பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், தீவனப் பயிர் சாகுபடி மற்றும் விதை உற்பத்தி குறித்த பயிற்சி புதுச்சேரி அருகே இயற்கை விவசாயம் மூலம் பீட்ரூட், கேரட், பீன்ஸ் சாகுபடி செய்து விவசாயிகள் சாதனை புரிந்து வருகின்றனர்.

## இயற்கை விவசாயத்துக்கு திரும்பும் விவசாயிகள்...!

விவசாய நிலங்களில் பயிர்களுக்காக ரசாயன உரம் பயன்படுத்தப்படுவதால், தற்போது அதிக பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இதனால் உணவுப் பொருள்களை உண்போருக்கு பல்வேறு நோய்த் தாக்குதல்கள் ஏற்படுகின்றன. மேலும் விவசாய நிலங்களும் பயனற்ற நிலைக்குப் போகின்றன. இதனைத் தடுக்கும் வகையில் விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாறி வருகின்றனர்.

இவ்வாறு மாற விரும்பும் விவசாயிகளுக்கு புதுச்சேரி அடுத்த பிளஸ். பாளையத்தில் செயல்படும் நம்மாழ்வார் இயற்கை உழவர் சங்கத்தின் தலைவரான வேணுகோபால் தலைமையிலான நிர்வாகிகள் உரிய பயிற்சியும், விவசாய முறைகளையும் கற்றுக்கொடுத்து வருகின்றனர். இதுகுறித்து அச்சசங்கத்தின் தலைவர் வேணுகோபால் கூறியது: புதுச்சேரியில் இயற்கை விவசாயத்தில் ஈடுபட விவசாயிகளிடம் ஆர்வம் அதிகரித்துள்ளது. இயற்கை முறையில் நெல்லை மட்டும் நடவு செய்து வந்த விவசாயிகளிடம் சிறுதானியங்கள், காய்கறிகளை பயிர்செய்ய அறிவுறுத்தி வந்தோம். இதற்கு நல்ல பலன் கிடைத்து வருகிறது.

விவசாயிகள் ஆர்வம்: புதுச்சேரியில் கலிதீர்த்தாள்குப்பம், பிளஸ்.பாளையம், திருபுவனை பகுதியில் விவசாயிகள், குறைந்த செலவில் நல்ல மகசூல் அடைந்துள்ளனர். எங்கள் சங்கத்தில் 365 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் அனைவரும் இயற்கை விவசாயத்தையே செய்து வருகின்றனர். பாரம்பரிய முறையில் ரசாயன கலப்பில்லாத பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் என்பதே எங்களின் குறிக்கோள். மேலும் நுகர்வோரிடம் இயற்கை விவசாயத்தின் மீதான விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. நச்சு கலப்பில்லாத உணவை பெற வேண்டும் என ஆர்வத்தில் எங்களைத்தேடி வந்து பொருள்களை வாங்கிச்செல்கின்றனர். இது எங்களது பயிர்களுக்கு நல்ல விலையை பெற்றுத்தருகிறது.

அரசு உரிய ஒத்துழைப்பு அளித்தால் புதுச்சேரியை நோயில்லாத மாநிலமாக மாற்ற எங்களால் முடியும். சிக்கிம் மாநிலம் இயற்கை விவசாயத்தில் மட்டுமே பயிர் செய்கிறது. அதேபோல புதுச்சேரியும் 2020இல் இயற்கை விவசாயம் மட்டும் செய்யும் மாநிலமாக மாற்றம் பெறும் என்றார்.

திருபுவனையைச் சேர்ந்த விவசாயி கஜேந்திரன் கூறியது: இயற்கை விவசாயத்தில் முதலில் நெல் மட்டும்தான் பயிரிட்டு வந்தோம். அதற்கு மண் புழு உரம், சாணம் ஆகியவற்றையே பயன்படுத்தினோம். நவீனரக நெற்பயிர்களை விட இயற்கை விவசாய நெல் உற்பத்திக்கு அதிக காலம் பிடித்தது. ஆனால் அதற்கேற்ப நல்ல விலை கிடைத்தது. தற்போது சிறுதானியங்களையும், கேரட், இன்சுலின் வெங்காயம், பீட்ரூட், நூக்கல்,

பீன்ஸ் போன்ற காய்கறிகளையும் இயற்கை முறையில் பயிர் செய்து வருகிறோம் என்றார்.

கல்லூரி முதல்வர் வி.கந்தசாமி பயிற்சி முகாமை தொடங்கிவைத்தார். கல்லூரியின் விதை நுட்பவியல் பேராசிரியர் மற்றும் விதைத் திட்ட முதன்மை அதிகாரியுமான டி.ராமநாதன் இப்பயிற்சியின் நோக்கம் குறித்துப் பேசினார்.

பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்துறை தலைவர் (பொ) பேராசிரியர் எஸ்.திருமேனி, உழவியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஆர்.பூங்குழலன் ஆகியோர் தீவனப் பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினர். உழவியல் துறை பேராசிரியர் எஸ்.மாலா, பண்ணையில் பயிற்சிக்காக வளர்க்கப்படும் பண்ணைப் பகுதியை விவசாயிகளுக்கு நேரில் காட்டி விளக்கினார். கால்நடைகள் பராமரிப்பு குறித்து கல்லூரியின் கால்நடைத் துறை பேராசிரியர் எஸ்.ஜார்ஜ் பாரடைஸ் பேசினார். பேராசிரியர் எஸ்.மாலா நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காஞ்சியில் மாம்பழ சீசன் துவங்கியாச்சு!; கார்பைட் பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை**

காஞ்சிபுரம் : மாம்பழம் விற்பனை துவங்கியுள்ள நிலையில், ரசாயனம் மூலம் பழுக்க வைத்த பழங்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, உணவுப்பொருள் பாதுகாப்புத்துறை அலுவலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தின் அனைத்து மார்க்கெட்டுகளிலும், கடைகளிலும், மாம்பழம் விற்பனை துவங்கியுள்ளது. பங்கனப்பள்ளி ரகம் மட்டும் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. 1 கிலோ, 100 ரூபாய்

என்பதால், மாம்பழம் விற்பனை சற்று மந்தமாகத்தான் உள்ளது என, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். அடுத்த வாரம், பல ரக மாம்பழங்கள் விற்பனை வரவுள்ளதாகவும், அடுத்த வாரம் முதல், வியாபாரம் சூடு பிடிக்கும் எனவும் அவர்கள் கூறுகின்றனர். மாம்பழ விற்பனை ஒரு புறமிருக்க, மாம்பழத்தை பழுக்க வைக்க பயன்படுத்தும், 'கார்பைட்' எனப்படும் ரசாயன கற்களை பயன்படுத்தினால், கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்படும் என, உணவுப்பொருள் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

மாவட்ட நிர்வாகம் துணை நிற்குமா!

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கடைகள், உணவகங்களை ஆய்வு செய்யும் போது, தரமற்ற பழங்கள், உணவு பொருட்களை விற்கும் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால், அவர்கள், அரசியல்வாதிகளின் உதவியுடன், நடவடிக்கைகளில் சிக்காதவாறு தப்பித்து விடுகின்றனர். எங்களின் நடவடிக்கைகளுக்கு, மாவட்ட ஆட்சியர் மற்றும் எஸ்.பி., துணை நின்றால், தரமற்ற உணவுப்பொருட்கள் விற்கும் உணவகம், கடைகள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்.

**கொப்பரை, தேங்காய் ஏலம்**

கோபி: கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வாரந்தோறும் வியாழக்கிழமை கொப்பரை ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், ஒரு கிலோ கொப்பரை, 51.51 ரூபாய் முதல், 53.41 ரூபாய்க்கும், மாதிரி விலையாக, 52.41 ரூபாய்க்கும் விலை போனது. ஏலத்தில், 194 மூட்டை கொப்பரை, ஐந்து லட்சத்துக்கு ஏலம் போனது. இதேபோல் பவானி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், தேங்காய் ஏலம் நடந்தது. இதில், 2,800 காய்கள், 14 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது. குறைந்தபட்சம், 2.80 ரூபாய்க்கும், அதிகபட்சம், 9.55 ரூபாய்க்கும், சராசரியாக, 6.50 ரூபாய்க்கும் விலை போனது.

**கோடை வெயில் நுங்கு விற்பனை ஜோர்**

பந்தலூர்: கோடை வெயில் கொளுத்த துவங்கியுள்ள நிலையில், நுங்கு விற்பனை களைகட்டியுள்ளது.நீலகிரி முழுவதும், கோடை சீசன் களைகட்டியுள்ள நிலையில், வெப்பமான காலநிலை நிலவி வருகிறது. பொதுமக்கள் மின்விசிறி உதவியுடன் இரவை போக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மத்தியில் சமவெளிப்பகுதிகளிலிருந்து, கொண்டுவரப்படும் நுங்கு விற்பனையும் அதிகரித்துள்ளது. நுங்கு, ஒரு சுளைக்கு, 6 ரூபாய் விலை பெறப்படுகிறது. விலை அதிகம் என்றாலும், கோடை வெப்பத்திலிருந்து தப்ப, பொதுமக்கள் நுங்கை ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

**தக்காளி கூடை ரூ.160 ஆக உயர்வு**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி, கிணத்துக்கடவு மற்றும் வடக்கிபாளையம் நெகமம் பகுதிகளில் தக்காளி சாகுபடி அதிகம் நடக்கிறது. தற்போதைய நிலவரப்படி, சுட்டெரிக்கும் வெயில் காரணமாக தக்காளிச்செடிகள் முற்றிலும் காய்ந்து, சருகுகளாக மாறியுள்ளன.

ஒரு சில இடங்களில், அதாவது பாசன வசதி உள்ள நிலங்களில் மட்டும், தக்காளி சாகுபடி நடக்கிறது. கடந்த இரு மாதங்களாக ஒரு கூடை தக்காளி, 30 - 50 ரூபாய் வரையில் விற்றது. கடந்த ஒருவாரமாக மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால், தக்காளிக்கு கிராக்கி ஏற்பட்டு, விலையும் படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த வாரத்தில் ஒரு கூடை தக்காளி 50, 60 ரூபாய் என உயர்ந்தது.

நேற்று, தக்காளி வரத்து திடீரென குறைந்தது. ஆனாலும் தக்காளியை ஏலத்தில் எடுக்க வியாபாரிகளின் போட்டி இருந்தது.

இதனால், ஒரு கூடை தக்காளி நேற்று, 160 ரூபாயாக உயர்ந்தது. நேற்றுமுன்தினம் ஒரு கூடை, 130 ரூபாயாக இருந்தது. திடீரென நேற்று, 30 ரூபாயாக உயர்ந்தது விவசாயிகளுக்கு ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

மற்ற காய்கறிகளும் விலை உயர்ந்து விற்பனை செய்யப்பட்டன. கத்தரி, 450 ரூபாய், வெண்டை, 25 - 30 ரூபாய், பீர்க்கு, 32 ரூபாய், பாகல், 27 ரூபாய், புடலை, 22 ரூபாய், முருங்கை, 15 ரூபாய், பயிறு, 25 ரூபாயாகவும் உயர்ந்தது.

**மஞ்சளார் அணை நீர்பிடிப்பு பகுதியில் உழவுப்பணி**

தேவதானப்பட்டி: மழையின்றி மஞ்சளார் அணையின் நீர்மட்டம் குறைந்து வரும் நிலையில், பயிர் சாகுபடிக்காக அதன் நீர்பிடிப்பு பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் உழவு பணியை மேற்கொண்டுள்ளனர்.

மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களாக வறட்சி நிலவுகிறது. இதனால் கண்மாய், குளம், ஊரணி ஆகியவற்றில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டது, பல வறண்டு காணப்படுகின்றன. நீர்நிலைகள் பல இடங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் பிடியில் சிக்கியுள்ளது. அதில் அவர்கள் தென்னை, மா, இலவம் போன்ற நீண்ட காலம் பலன்தரும் மரங்களை வளர்த்துள்ளனர்.

தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளார் அணையின் உயரம் 57 அடி. மேற்குத் தொடர்ச்சி மலை வறட்டாறு, மூலாறு, மஞ்சளாறு, தலையாறு பகுதியில் பெய்யும் மழைநீர் அணைக்கு வந்து சேர்கிறது.

இதன் மூலம் திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் 5 ஆயிரத்து 200 ஏக்கர் பரப்பில் விளைநிலங்கள் பயன் பெறுகின்றன. முதல் போக நெல் சாகுபடி பணி நிறைவடைந்துள்ளது. அணையில் நீர்பிடிப்பு பகுதியில் வறட்சி காணப்படுவதால் அணைக்கு நீர்வரத்து இல்லை. அணையில் இருந்து நீர் வெளியேற்றப்படவில்லை. 35 அடிநீர் உள்ளது.

உழவுப்பணி

அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மழை பெய்தால் குறுகிய கால பயிர்களான தட்டை, வெண்டை, வெள்ளரி, மக்காச்சோளம் போன்றவற்றை சாகுபடி செய்வதற்காக நீர்பிடிப்பு பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் முதற்கட்டமாக உழவு பணியை மேற்கொண்டுள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மணிலா பயிரில் மகசூல் அதிகாரிகள் ஆய்வு

விருத்தாசலம், : விருத்தாசலம் அடுத்த கம்மாபுரம் வட்டாரத்தில் உள்ள கோட்டுமுளை, பெருந்துறை கிராமங்களில் உள்ள விவசாயிகள் மணிலா சாகுபடி அதிகம் செய்துள்ளனர். தற்போது மணிலா பயிர்கள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

பொருளியியல் மற்றும் புள்ளியல் துறை சார்பில் மகசூல் குறித்து ஆய்வு நடந்தது. கம்மாபுரம் வட்டார புள்ளியியல் ஆய்வாளர் லெனின், விருத்தாசலம் கோட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் இளங்கோவன் ஆகியோர் கொண்ட குழுவினர் கோட்டுமுளை, பெருந்துறை, ஒட்டிமேடு உட்பட கிராமங்களில் பயிர் செய்யப்பட்டிருந்த மணிலா பயிரில் விளைச்சல் குறித்தும், மகசூல் குறித்தும் ஆய்வு நடத்தினார்கள். ஆய்வின் போது உதவி வேளாண்மை அலுவலர்கள் சித்திராங்கி, தனசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## கொள்ளு அறுவடை பணி துவக்கம்

அரூர் : தர்மபுரி மாவட்டம் அரூர், கம்பைநல்லூர், தர்மபுரி, பாப்பிரெட்டிபட்டி உள்ளிட்ட பல்ேவறு பகுதிகளில் சுமார் 15 ஆயிரத்திற்கும் ேமற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் புன்செய் பயிராக கொள்ளு பயிரிடப்பட்டுள்ளது. மூன்று மாத பயிரான கொள்ளு தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. கொள்ளு பயிரிட ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதை தேவைப்படுகிறது. தோட்டத்திற்கு ேதவையான விதைகள் ஒரு கிலோ ரூ.35க்கு வாங்கி விவசாயிகள் விதைத்தனர். கொள்ளு விளைச்சலுக்கு ஏற்ற சீதோஷண நிலை இருந்தால் ஏக்கருக்கு 400 கிலோ தற்போது விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். தற்ேபாது கொள்ளு 1கிலோ ரூ.24 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## தர்மபுரி விவசாயிக்கு சிறந்த பண்ணை இயந்திர பயனீட்டாளர் விருது

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் சிறந்த பண்ணை இயந்திர பயனீட்டாளர் விருதை வழங்கியுள்ளது. தர்மபுரி மாவட்டம் அரூர் அருகே ஜடையன் கொட்டாய் கிராமத்தை சேர்ந்தவர் ெஜகதீசன் விவசாயி. இவர் கடந்த 10 வருடங்களாக துல்லிய பண்ணை முறையில் விவசாயம் செய்து வருகிறார். கடந்த 2004ம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் துல்லிய பண்ணை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது முதல் ஜெகதீசன் துல்லிய பண்ணை திட்டத்தின் மூலம் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வந்தார்.

பண்ணையில் வேலையாள் பற்றாக்குறையை போக்குவதற்காக பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பயன்பாட்டை தனது விவசாய பண்ணையில் ஜெகதீசன் துவக்கினார். சொட்டுநீர் பாசனம் மூலம் உரமிடுதலுக்கு ஆள்தேவை குறைந்தது. ஜெகதீசன் ஒருவரே நீர் மற்றும் உர மேலாண்மையை மேற்கொண்டு வந்துள்ளார். மாட்டில் இருந்து பால் கறப்பதற்கும் இயந்திரம் பயன்படுத்துவதால் நேரம் குறைந்துள்ளது. மாட்டுக்கொட்டகையில் வெயிலின் தாக்கத்தை குறைக்க சிறிய மழைதூவானை பயன்படுத்தினார். தீவன புற்களை அறுவடை செய்யவும், தீவன பயிர்களை நறுக்கவும் நவீன கருவியை பயன்படுத்தினார்.

இந்நிலையில் பண்ணையில் இயந்திர பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் மஞ்சள் அறுவடை செய்யும் கருவியை அவரே உருவாக்கியுள்ளார். இதன் மூலம் 60 சதவீத வேலையாட்கள் பயன்பாடு குறைந்துள்ளது. அதிகளவில் பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை ஜெகதீசன் பயன்படுத்தி வேலையாட்களை அதிகம் சார்ந்து இல்லாமல் சிறந்த முறையில் விவசாயம் செய்து வரும் ஜெகதீசனுக்கு தமிழ்நாடு வேளாண் பல்லைகழகம் 2015-16க்கான சிறந்த பண்ணை இயந்திர பயனீட்டாளர் விருதை வழங்கி கவுரவித்தது.இதையடுத்து தர்மபுரி மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட

ஒருங்கிணைப்பாளர் சண்முகம் மற்றும் அதிகாரிகள் ஜெகதீசனை பாராட்டினர்.

## அரசு கூட்டுறவு ஏல மையத்தில் 70 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 12வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 2 லட்சத்து 54 ஆயிரத்து 762 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 81 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 581 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று இருந்தாலும் குறைந்த அளவில் மட்டுமே தேயிலை தூள்களை கொள்முதல் செய்தனர்.

இதனால் 75 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் கடந்த வார விலை தான் வழங்கப்பட்டது. அதன்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.65 முதல் ரூ.70 உயர் வகை ரூ.83 முதல் ரூ.90, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.70 முதல் ரூ.75, உயர் வகை ரூ.88 முதல் ரூ.92 வரை விலை கிடைத்தது.கடந்த சில வாரங்களாக தேயிலை தூள் விற்பனையும் அதன் விலையும் குறைந்து வந்த நிலையில் இந்த வாரம் விலையும் விற்பனை அளவும் உயராமல் இருந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## இயற்கை வேளாண் நிறுவனத்தில் உலக வங்கி ஆலோசகர் ஆய்வு

புதுக்கோட்டை : புதுகை இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவனத்தை உலக வங்கி ஆலோசகர் விகாஸ் சவுத்ரி ஆய்வு செய்தார். உலக வங்கி ஆலோசகர் விகாஸ் சவுத்ரி 1,028 சிறு, குறு விவசாயிகளை உறுப்பினர்களாக கொண்ட புதுகை இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவனத்தை பார்வையிட்டு, சிறு குறு விவசாயிகளின் நலனுக்காக செயல்பட்டுவரும் கம்பெனியின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். மதிப்புக் கூட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வரும் சிறுதானிய அரிசிகள், பாரம்பரிய அரிசிகள், பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள்

ஆகியவற்றை பார்வையிட்டு, சிறுதானிய அரவை இயந்திரங்களையும் பார்வையிட்டார். மேலும், நிறுவனத்தின் இயக்குநர்களுடன், நிறுவனம் செயல்படுகின்றவிதம், நிறுவனத்துக்கும் விவசாயிகளுக்குமான தொடர்பு, கடந்த வருட கொள்முதல், விற்பனை, அடைந்த லாபம், கம்பெனியின் எதிர்கால செயல்பாட்டு திட்டம் போன்றவற்றை கலந்துரையாடல் செய்து, நிறுவனத்தை வலுப்படுத்துவதற்காக செயல்படுத்த வேண்டிய வேலைகளான விற்பனையை விரிவுபடுத்துதல், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் அல்லாது தானியங்களாகவும் விற்பனை செய்தல், நிறுவனங்களுடனான தொடர்பை வலுப்படுத்தி விற்பனையை விரிவுபடுத்துதல் போன்ற ஆலோசனைகளை வழங்கி, கம்பெனியின் வணிகப் பெயர் மற்றும் சின்னம் (பிராண்டு மற்றும் லோகோ) ஆகியவற்றை வெளியிட்டு, அடுத்த வருட இறுதிக்குள் ரூ.1 கோடி வரை விற்பனை செய்ய வேண்டுகோள்விடுத்தார்.

ஒரு நிறுவனத்தின் அடிப்படை விஷயங்களான கொள்முதல், இருப்பு வைக்குமிடம், அரவை இயந்திரங்கள், விற்பனை ஆகியவை சராசரியாக ஒரே இடத்தில் செயல்படுவது மிகவும் பாராட்டுக்குரியது என்றார். இதில் தமிழ்நாடு வேளாண் வணிக இணை இயக்குநர் முகமது இக்பால், புதுகை வேளாண் இணை இயக்குநர் அண்ணாமலை, புதுகை வேளாண் வணிக துணை இயக்குநர் சிங்காரம், முன்னோடி விவசாயி தனபதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக, உற்பத்தியாளர் கம்பெனியின் நிர்வாக இயக்குநர் ஆதப்பன் வரவேற்றார். நிறுவனத்தின் செயல்பாடுகள், நிறுவனத்தின் வரவு செலவு கணக்கு குறித்து நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் அகிலா விளக்கினார். விஜயா நன்றி கூறினார்.

## தோட்டக்கலை விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம்

கொள்ளிடம் : கொள்ளிடத்தில் தோட்டக்கலை விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. ஒன்றிய தலைவர் ரவிசுந்தரம் தலைமை வகித்தார். துணை தலைவர் வீரப்பன் வரவேற்றார். விவசாயி புருஷோத்தமன், இயற்கை விவசாயி பன்னீர் முன்னிலை வகித்தனர். கொள்ளிடம் வட்டார விவசாயிகள் சங்க கூட்டமைப்பு தலைவர்

சிவப்பிரகாசம் பிள்ளை சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே சந்த படுகைக்கும் பெராம்பட்டுக்கும் இடையில் உப்புநீர் உள்புகாதவாறு தடுப்பணை கட்ட வேண்டும். தோட்டப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இலவச மின்மோட்டார் வழங்க வேண்டும். கடந்த மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தோட்டப்பயிர் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்காததற்கு கண்டனம் தெரிவிப்பது. விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகையை உடனே வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வீரமணி நன்றி கூறினார்.

## பெரியாறு அணை நீர்மட்டம் 110.8 அடி 5 நாட்களாக ஒரே அளவில் நிலை நிறுத்தம்

கூடலூர், : பெரியாறு அணையின் நீர்மட்டம் கடந்த 5 நாட்களாக 110.80 அடியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது.முல்லைப்பெரியாறு அணையில், கடந்த திங்கள் முதல் 5 நாட்களாக நீர்வரத்து வினாடிக்கு 150 கனஅடியாகவும், நீர்வெளியேற்றம் 150 கனஅடியாகவும் உள்ளது. இதனால், அணையின் நீர்மட்டம் கடந்த 5 நாட்களாக 110.80 அடியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது

நேற்றைய நிலவரப்படி 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் 110.80 அடி. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 150 கனஅடி. அணையிலிருந்து வினாடிக்கு 150 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்புநீர் 1038 மில்லியன் கனஅடி.

71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் 36.75 அடி. நீர்வரத்து வினாடிக்கு 101 கனஅடி. மதுரை குடிநீருக்காக வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்புநீர் 713 மில்லியன் கனஅடி. 57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 33.80 அடி. அணைக்கு நீர்வரத்தும் இல்லை; வெளியேற்றமும் இல்லை. அணையின் இருப்புநீர் 109.93 மில்லியன் கனஅடி.126 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 95.94 அடி.

அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 3 கனஅடி. அணையிலிருந்து வினாடிக்கு 3 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 55.91 மில்லியன் கனஅடி.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## கோவை வர்த்தக மையத்தில் தேயிலைத்தூள் விலை திடீர் உயர்வு கிலோவுக்கு 3 ரூபாய் 12 காசு அதிகரிப்பு



கோவை வர்த்தக மையத்தில், தேயிலைத்தூள் விலை திடீரென்று உயர்ந்துள்ளது. இதன்படி கிலோவுக்கு 3 ரூபாய் 12 காசு அதிகரித்து உள்ளது.

<u>தேயிலைத்தூள் ஏலம்</u>

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் வாரந்தோறும் இணையதளம் மூலம் தேயிலைத்தூள் ஏலம் நடைபெற்று வருகிறது.

இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏலதாரர்கள் தேயிலைத் தூள் ரகங்களை ஏலத்தில் எடுத்து வருகிறார்கள். இதன்படி நடைபெற்ற 13–வது ஏலத்தின் விவரம் வருமாறு:–

விலை அதிகரிப்பு

இந்த ஏலத்துக்கு 1 லட்சத்து 68 ஆயிரத்து 945 கிலோ தேயிலைத்தூள் வந்தது. அதில் 1 லட்சத்து 54 ஆயிரத்து 506 கிலோ தேயிலைத்தூள் ஏலம் போனது. இது 91 சதவீதம் ஆகும். இதன் ஏல மதிப்பு ரூ.1 கோடியே 64 லட்சத்து 34 ஆயிரத்து 803 ஆகும்.

இதில் 14 ஆயிரத்து 439 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ தேயிலைத் தூளின் சராசரி ஏல மதிப்பு 102 ரூபாய் 37 காசு ஆகும். இது கடந்த வாரம் 99 ரூபாய் 95 காசாக இருந்தது. இதன்மூலம் கிலோவுக்கு 3 ரூபாய் 12 காசு விலை அதிகரித்து உள்ளது. கடந்த சில ஏலங் களில் தொடர்ந்து விலை வீழ்ச்சி அடைந்து காணப்பட்ட நிலையில், இந்த ஏலத்தில் விலை உயர்ந்து உள்ளதால், ஏலதாரர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மொத்த வர்த்தகம்

இலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 34 ஆயிரத்து 725 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 93 ஆயிரத்து 236 கிலோ ஏலம் போனது. இது 65 சதவீதம் ஆகும். 41 ஆயிரத்து 489 கிலோ தேக்கம் அடைந்துள்ளது. இதன் மொத்த விற்பனை மதிப்பு ரூ.83 லட்சத்து 91 ஆயிரத்து 240 ஆகும். ஒரு கிலோ இலைரக தேயிலையின் சராசரி ஏல மதிப்பு 90 ரூபாய். இது கடந்த வாரம் 88 ரூபாய் 41 காசாக இருந்தது. கிலோவுக்கு 1 ரூபாய் 59 காசு விலை அதிகரித்துள்ளது.

இந்த ஏலத்தில் மொத்தம் 2 லட்சத்து 47 ஆயிரத்து 642 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை விற்பனையாகி உள்ளது. 55 ஆயிரத்து 928 கிலோ தேக்கம் அடைந்துள்ளது. இந்த ஏலத்தில் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 48 லட்சத்து 26 ஆயிரத்து 43–க்கு வர்த்தகம் நடைபெற்று உள்ளது.

இந்த தகவலை கோவை தேயிலை விற்பனை மைய (போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்து உள்ளார்.